◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

NEED 24 NEWS
हर ख़बर, हर शहर

நீட் 24 நியூஸ்

ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம்

◆ ADVT ◆
இங்கே விளம்பரம்
98700 06472 · need24.digital

DIGITAL E-PAPER

PRGI APPLICATION
UNDER PROCESS
Application No.
T/GJ/2026/0619/2304/1577

GST
GSTIN
24CINPG0564Q1ZT

UDYAM REGISTERED
UDYAM-GJ-14-0003714

◆ DIGITAL NEWS NETWORK ◆
இந்தியாவின் நம்பகமான பன்மொழி டிஜிட்டல் செய்தி வலையமைப்பு
11+ Languages | 24×7 Live | e-Paper Daily

எங்கள் App பதிவிறக்கவும்
Download on the App Store
GET IT ON Google Play

www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:

तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता

TAMIL NADU | நீட் 24 நியூஸ் · ஒவ்வொரு செய்தி, ஒவ்வொரு நகரம் | 04 November 2026


காரைக்குடி பர்மா காலனி பகுதியில் தீ விபத்து.



காரைக்குடி பர்மா காலனி பகுதியில் இயங்கி வந்த தனியார் அழகு நிலையத்தில் (Beauty parlour)ல் ஏற்பட்ட மின் கசிவால் திடீர் தீ விபத்து ஏற்ப்பட்டது. உடனே காரைக்குடி தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர் தீயை அணைத்தனர்.உயிர் சேதம் எதுவும் இல்லை. இதனால் அப்பகுதியில் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

— M. Arumugam

காரைக்குடி வித்தியாகிரி பள்ளி மாணவன் சாந்த சீலனின் சாதனை.



காரைக்குடி வித்யாகிரி பள்ளியை சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மாணவன் சாந்த சீலன் மாவட்ட அளவில் நடைபெற்ற ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் முதலிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றார். மேலும் இவர் மாநில அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளார். இவரை பள்ளி முதல்வர் ஹேமா மாலினி சுவாமிநாதன் பாராட்டி வாழ்த்தினார்.

— M. Arumugam

காரைக்குடியில் பத்திர எழுத்தர் சங்கம் ஆர்ப்பாட்டம்.



காரைக்குடியில் நேற்று பத்திரப்பதிவாளர் அலுவலகம் முன்பு பத்திர எழுத்தாளர்கள் சங்கம் மிகப் பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அரசு பத்திர பதிவு மையங்களை தமிழக அரசு தனியாருக்கு விட ஒப்பந்தம் செய்ய முடிவு செய்துள்ளது. இதனை கண்டித்து ஏராளமான பத்திர பதிவு எழுத்தர்கள் கலந்து கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

காரைக்குடியில் நடைபெற்ற கல்லறை திருவிழா.



இன்று நவம்பர் -02 காரைக்குடியில் புகழ் பெற்ற செஞ்சை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தின் கல்லறை தோட்டத்தில் இறந்த ஆன்மாக்களின் நினைவாக கல்லறை நடைபெற்றது. இதில் ஏராளமான கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டு தங்கள் இறந்த உறவினர்களின் நினைவாக கல்லறையில் இத்திருவிழாவை கொண்டாடினர்.

— M. Arumugam

காரைக்குடியில் கோவில் இட பிர்ச்சனை.



காரைக்குடி ஆரியபவன் ஹோட்டல் அருகில் லலிதா முத்துமாரி அம்மன் கோவில் நிர்வாகிகள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள், இக்கோவில் பின்புறம் உள்ள காலி இடம் தொடர்பாக அதன் அருகே உள்ள மீனாட்சி அம்மன் கோவில் டிரஸ்ட் நிர்வாகத்தை கண்டித்து இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்

— M. Arumugam

காரைக்குடியில் ராதா கல்யாண மகோத்சவ விழா.



காரைக்குடி செக்காலையில் உள்ள சங்கர மணிமண்டபத்தில் நேற்று 15 ஆம் ஆண்டு ராதா கல்யாண மகோத்சவ விழாநடைபெற்றது. இதில் உஞ்சவிருத்தியும், மதியம் 12.30 மணிக்கு ராதா கல்யாண மகோத்சவமும் நடந்தது. நிர்வாகிகள் சந்திரசேகர், சிவக்குமார் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

— M. Arumugam

காரைக்குடியில் மொபைல் ஆம்புலன்ஸ் மருத்துவ சேவை.



காரைக்குடியில் மைலேப் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் மை ஆம்புலன்ஸ் என்ற மொபைல் மருத்துவ சேவை நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இச் சேவையை கனிமவளத்துறை அமைச்சர் டாக்டர் பிரபு சார்பாக அவரது தந்தை துரை கருணாநிதி அவர்கள் மற்றும், குளோபல் மருத்துவமனை நிறுவனர் டாக்டர் குமரேசன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

— M. Arumugam

EDUCATION

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி அருகே எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியின் பழுதடைந்த கட்டிடங்களை உடனடியாக இடித்து, காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டிய அவசர கோரிக்கை



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஒன்றியத்தில் அமைந்த எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில், 30 ஆண்டுகளுக்கும் மேலான பழைய மூன்று கட்டிடங்கள் தீவிர ஆபத்தில் உள்ளன. பொதுப்பணித்துறை சார்பில் பல ஆண்டுகளாக எச்சரிக்கை அறிவிப்புகள் வைக்கப்பட்டாலும், இக்கட்டிடங்கள் இன்னும் இடிக்கப்படவில்லை; மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அவற்றை உடனடியாக இடித்து அகற்ற வேண்டும்.

பள்ளியின் தினசரி செயல்பாடுகள் பல காலிப் பணியிடங்களால் பாதிக்கப்படுகின்றன. இரவு நேர காவலர், துப்புரவு பணியாளர், எழுத்தர், ஆய்வக உதவியாளர் போன்ற முக்கியப் பணியிடங்கள் காலியாக உள்ளதால், கல்வி சூழல் மற்றும் மாணவர்களின் பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது.

இந்த பள்ளி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு எல்.கே.ஜி., யு.கே.ஜி. மற்றும் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்கியது; ஆரம்பத்தில் 20 மாணவர்களுடன் தொடங்கிய இப்பள்ளி இப்போது சுமார் 900 மாணவர்களை, 30-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து, 6-ம் முதல் 12-ம் வகுப்பு வரை கல்வி வழங்குகிறது; இது மாவட்டத்தின் முக்கிய கல்வி நிறுவனமாகும்.

மாவட்ட ஆட்சியர், கல்வித்துறை அதிகாரிகள், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் ஆகியோரிடம் இந்த பிரச்சினைகள் குறித்து உடனடி தலையீடு மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோரப்பட்டுள்ளது.

எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் (1) பழுதடைந்த மூன்று கட்டிடங்களை உடனடியாக இடித்து அகற்றுதல், (2) இரவு காவலரை நியமித்தல், (3) எழுத்தர் பணியிடத்தை நிரப்புதல், (4) ஆய்வக உதவியாளரை நியமித்தல், (5) துப்புரவு பணியாளர்களை நியமித்தல், (6) மாணவர்களின் பாதுகாப்பும் தரமான கல்வியும் உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் ஆகியவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

— Siva


ஆண்டுகளுக்கு முன்பு எல்.கே.ஜி., யு.கே.ஜி. மற்றும் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வியைத் தொடங்கியது; ஆரம்பத்தில் 20 மாணவர்களுடன் தொடங்கிய இப்பள்ளி இப்போது சுமார் 900 மாணவர்களை, 30-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து, 6-ம் முதல் 12-ம் வகுப்பு வரை கல்வி வழங்குகிறது; இது மாவட்டத்தின் முக்கிய கல்வி நிறுவனமாகும்.

மாவட்ட ஆட்சியர், கல்வித்துறை அதிகாரிகள், தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் ஆகியோரிடம் இந்த பிரச்சினைகள் குறித்து உடனடி தலையீடு மற்றும் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோரப்பட்டுள்ளது.

எம். ரெட்டியபட்டி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் (1) பழுதடைந்த மூன்று கட்டிடங்களை உடனடியாக இடித்து அகற்றுதல், (2) இரவு காவலரை நியமித்தல், (3) எழுத்தர் பணியிடத்தை நிரப்புதல், (4) ஆய்வக உதவியாளரை நியமித்தல், (5) துப்புரவு பணியாளர்களை நியமித்தல், (6) மாணவர்களின் பாதுகாப்பும் தரமான கல்வியும் உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல் ஆகியவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

— Siva

கோலம் மூலம் வரைபடம். வரைந்து ஆட்சிரிடம் கோரிக்கை வைத்த கிராம மக்கள்



நாகப்பட்டினம் மாவட்டம் வடகரை ஊராட்சியில் உள்ளாட்சிகள் தின கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் லதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கிராமத்தின் வரைபடத்தை கோலம் மூலமாக வரைந்து தங்களது கிராமத்திற்கு தேவையான கோரிக்கைகளையும் கோலம் வாயிலாக பொதுமக்கள் எழுதி இருந்தனர். இதனைப் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் கிராமத்திற்கு தேவையான வசதிகளை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுமக்களுக்கு உறுதி அளித்தார். மேலும் சாலை பாதுகாப்பை உறுதிப்படுத்த பொதுமக்கள் சிறுவர்களுக்கு இருசக்கர வாகனங்களை பயன்படுத்த அனுமதிக்க கூடாது எனவும், வீட்டில் உள்ள கணவர்மார்கள் வெளியில் செல்லும்போது ஹெல்மெட் கட்டாயம் அணிந்து செல்ல மனைவிமார்கள் வலியுறுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

— MAHENDRAN M

CRIME

விருதுநகரில் நள்ளிரவு கொடூரம்: 82 வயது மூதாட்டியின் காதை அறுத்து 11 பவுன் நகை கொள்ளை!



விருதுநகர் மாவட்டம், அ.முக்குளம் அருகே உள்ள எம்.பறையன்குளம் பாண்டியன்கோட்டை கிராமத்தில் நேற்று நள்ளிரவு மர்ம நபர்களால் நடத்தப்பட்ட கொடூர கொள்ளை சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நள்ளிரவு சுமார் 12 மணி அளவில் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த அடையாளம் தெரியாத நபர்கள், 82 வயது மூதாட்டி அணிந்திருந்த நகைகளைப் பறிக்க முயன்றனர். மூதாட்டி கூச்சலிட, கொடூர மனப்பான்மை கொண்ட அக்கிரமிப்பாளர்கள் அவர் காதில் அணிந்திருந்த 7 பவுன் 'சவரி' நகை மற்றும் கழுத்தில் இருந்த 4 பவுன் தங்கச் சங்கிலி என மொத்தம் 11 பவுன் தங்க நகைகளை காதோடு சேர்த்து அறுத்துக் கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.


எம்.பறையன்குளம் பாண்டியன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பாயி அம்மாள் (வயது 82). நேற்று இரவு வழக்கம்போல் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நடந்துள்ளது. சம்பவம் நடந்த கிராமத்தின் ஒரு பகுதி சிவகங்கை மாவட்ட எல்லையிலும், மறு பகுதி விருதுநகர் மாவட்ட எல்லையிலும் அமைந்துள்ளது. மூதாட்டியின் வீடு விருதுநகர் மாவட்ட எல்லைக்குட்பட்டதால், தகவல் அறிந்த அ.முக்குளம் காவல் நிலையப் போலீசார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தடய அறிவியல் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு, கொள்ளையர்களின் தடயங்களைச் சேகரித்து தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

காதில் பலத்த காயமடைந்த மூதாட்டி முத்துக்கருப்பாயி உடனடியாக மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சமீபகாலமாக விருதுநகர் மாவட்டம் மற்றும் இதன் எல்லைப் பகுதிகளில் தொடர்ந்து கொலை, கொள்ளை போன்ற குற்றச் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், அப்பகுதி பொதுமக்கள் கடும் பீதியிலும் அச்சத்திலும் ஆழ்ந்துள்ளனர். குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்து, அப்பகுதியில் காவல்துறை ரோந்துப் பணியைத் தீவிரப்படுத்த வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

— Siva

CRIME

நரிக்குடி அருகே நள்ளிரவில் 82 வயது மூதாட்டியைத் தாக்கி காதை அறுத்து 11 பவுன் நகை கொள்ளை



நரிக்குடி அருகே நள்ளிரவு நேரத்தில் 82 வயது மூதாட்டி மீது கடுமையான தாக்குதல் நடந்தது. தாக்குதலாளர்கள் அவளின் காதை அறுத்து, உடனே புறப்பட்டனர்.

தாக்கப்பட்டவரின் உடல் காயம் மற்றும் காதை அறுத்தல் ஆகியவை உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றன. அதே நேரத்தில், தாக்குதலாளர்கள் 11 பவுன் நகை திருடி பறந்துவிட்டனர்.

உள்ளூர்ப் போலீஸ் சம்பவத்தை பதிவு செய்து, விசாரணைத் தொடங்கியுள்ளது. சம்பவம் நடந்த இடம் மற்றும் நேரம் பற்றிய தகவல் கொண்டவர்களை உடனடியாக தொடர்பு கொள்ள கேட்டுக் கொண்டுள்ளது.

காரைக்குடி கவனக் கலை மையத்தின் பொது நல சேவை.



காரைக்குடியில் செயல்பட்டு வரும் கவனக் கலை பொதுநல சேவை மன்ற உறுப்பினர்கள் தீபாவளிக்கு முன்னதாக சேகரித்து காரைக்குடியில் உள்ள பெரும்பாலான முதியோர் இல்லத்தில் வசித்து வரும் முதியோர்களுக்கு வழங்கினார். இச்சேவையை பலரும் பாராட்டி வருகின்றனர்.

— M. Arumugam

காரைக்குடியில் இடிந்து விழும் நிலையில் அங்கன்வாடி மையம்.



காரைக்குடி செஞ்சை பகுதியில் ஆதிதிராவிடர் குடியிருப்பு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. இதில், 20க்கும் மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். கட்டடத்தின் கூரை சேதமடைந்து மழை நீர் உள்ளே இறங்குவதால் பொருட்கள் சேதமாவதோடு குழந்தைகளுக்கும் அபாயம் நிலவுகிறது. எனவே புதிய கட்டடத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்றுஇப்பகுதி மக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.

— M. Arumugam

காரைக்குடி ராஜராஜன் கல்லூரியில் தேசியத் திருக்குறள் மாநாடு.



காரைக்குடி, அமராவதி புதூர் அருகே அமைந்துள்ள ஸ்ரீ ராஜராஜன் கல்லூரியில் தேசிய திருக்குறள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டை குன்றக்குடி ஆதினம் திரு. பொன்னம்பல அடிகளார் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். இதில் ஏராளமான தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

— M. Arumugam

ஜி திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகளை பார்வையிட் ஆட்சியர்



நாகப்பட்டினம் வட்டாரம் ஒரத்தூர் கிராமத்தில் விபி கிராம ஜி திட்டத்தின் கீழ் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.அப்போது அரசு துறையை சேர்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நாகப்பட்டினம் வட்டாரம் ஒரத்தூர் கிராமத்தில் விபி கிராமப்புத்துயிர்ப்பு இயக்கத்தின் கீழ் வாய்க்கால் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.அப்போது அரசு துறையை சேர்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

— MAHENDRAN M

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டம்!



வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் கிராம ஊராட்சிகளிலும் நாளை 01-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கிராம சபைக் கூட்டம் நடைபெற உள்ளது.

தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டத்தைத் தவறாமல் நடத்திட வேண்டும் என அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலெக்ஸ் உத்தரவிட்டுள்ளார்.

கூட்டத்தில் விவாதிக்கப்பட உள்ள முக்கிய அம்சங்கள்:

கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்த விவாதம்.

கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை.

மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல்.

கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள்.

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

தமிழ்நாடு கிராம மேம்பாடு மற்றும் மறுமலர்ச்சி முன்னெடுப்பு (TN-VETRI).

குழந்தை மற்றும் வளரிளம் பருவத் தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

பல்வுயிர் மேலாண்மைக் குழுக்கள் (BMCs) குறித்த விவாதம்.

இழிவுதரும் சாதிப் பெயர்களை மாற்றம் செய்தல்.

வளர்ப்பு பிராணிகளுக்கு ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல்.

தெரு நாய்களுக்கு கருத்தடை மற்றும் ரேபிஸ் தடுப்பூசி செலுத்துதல்.

(SabhaSaar Portal) தொடர்பான விவாதம்.

கிராம செழுமை மீட்சித் திட்டம் (VPRP).

பொதுச் சொத்துக்கள், சேவைகள் மற்றும் வள மேம்பாட்டுத் திட்டம்.

சமூக மேம்பாட்டுத் திட்டம்.

பண்ணை மற்றும் பண்ணை சாரா செயல்பாடுகள்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை தொடர்பான விவாதம்.

ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகளின் ஒருங்கிணைப்பு.

தன்னார்வ ஊராட்சியாளர் திறன் பயிற்சித் திட்டம்.

வளர்ச்சியடைந்த பாரதம் கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதாரத் திட்டம்.

மழைநீர் சேகரிப்பு.

தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டம்.

இதர பொருட்கள்.

மேலும், இக்கிராம சபைக் கூட்டங்களில் அனைத்துத் துறை உயர் அலுவலர்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளவும், கூட்டம் முறையாக நடைபெறுவதை கண்காணிக்க ஒன்றிய அளவில் மண்டல அலுவலர்கள் மற்றும் சிறப்பு மேற்பார்வையாளர்களை நியமனம் செய்யவும் மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

எனவே, பொதுமக்கள் தங்கள் கிராமங்களில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்று, கிராம வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான தங்களது கருத்துகள், கோரிக்கைகள் மற்றும் புகார்களைத் தெரிவித்து பயன்பெறலாம்.

— A RAM PRABHU

விவசாயத்தில் சிறப்பாக விளங்கும் காரைக்குடி மருத்துவர்.



காரைக்குடி குளோபல் மருத்துவமனை நிறுவனரும், டாக்டருமாகிய குமரேசன் அவர்கள் என்னதான் மருத்துவ பணிகளில் பிஸியாக இருந்தாலும் தனது சொந்த நிலத்தில் தானே விவசாய பணிகளையும் செய்து வருகிறார். இவரை இப் பகுதி மக்களும் இளைஞர்களும் பாராட்டி வருகின்றனர்.

— M. Arumugam

சர்தார் வல்லபாய் பட்டேல் நினைவு தினம் இன்று



இன்று சர்தார் வல்லபாய் பட்டேலின் நினைவு தினம்.

இந்த நாளை நாட்டின் பல பகுதிகளில் மக்களும், அரசாங்க அமைப்புகளும் அவரின் பங்களிப்புகளை நினைவு கூர்ந்து மரியாதை செலுத்துகின்றனர்.

அவரின் பாரம்பரியம் மற்றும் இந்திய ஒன்றியத்தை உருவாக்கிய முயற்சிகள் இன்றும் பலருக்கு ஊக்கமாக உள்ளன.

— Kumar Periyasamy

161-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்த சேலம் நகரம்



வரலாற்றுச் சிறப்புமிக்க பக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ள சேலம் நகரம் 160 ஆண்டுகளை நிறைவு செய்து 161-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது.

மலைகள் சூழ்ந்த நகரமான சேலம் நகராட்சியாக உருவெடுத்த தினமான நவம்பர் 1-ஆம் தேதி ஆண்டுதோறும் சேலம் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. 1866-ஆம் ஆண்டு நகரவைத் தலைவர் மற்றும் 17 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட சேலம் நகராட்சி, 1994-ஆம் ஆண்டு மாநகராட்சியாக மாற்றப்பட்டு, தற்போது பொலிவுறு நகரம் எனப்படும் ஸ்மார்ட் சிட்டியாக உருவெடுத்துள்ளது.குறிப்பாக, சேலம் கோட்டையின் பாதுகாப்புக்காக இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ஜார்ஜ் காலத்தில் உருவாக்கப்பட்ட பீரங்கி தற்போதும் சேலம் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கால நேரத்தைத் தெரிந்துகொள்ளும் வகையில் நண்பகல் 12 மணிக்கு இந்த பீரங்கி மூலம் குண்டு போடும் வழக்கம் இருந்துள்ளது. 1873-ஆம் ஆண்டுக்கு பின்னர் இந்த நேரம் இரவு 8 மணிக்கு மாற்றப்பட்டது. 1950 ஆம் ஆண்டு இந்த வழக்கம் நிறைவுக்கு வந்தாலும், இதன் அடையாளமாக இன்றைக்கும் சேலத்தில் குண்டு போடும் தெரு என்ற பகுதி உள்ளது.சேலம் மாநகரத்தின் வரலாற்றில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துக்கு மிக முக்கிய பங்கு உண்டு.


முதல் மாவட்டமான சேலத்தில் பணியாற்றிய ஆங்கிலேய ஆட்சியர்கள் மற்றும் அதிகாரிகளின் நினைவாகப் பெயரிடப்பட்ட முக்கிய தெருக்கள், சாலைகள் இன்றளவும் புழக்கத்தில் உள்ளன. இதே போன்று, சேலத்தின் மற்றொரு முகம் புவி அமைப்பியல் ரீதியானது. புவியியல் ஆய்வாளர்களின் சொர்க்கம் என்றழைக்கப்படும் சேலத்தின் கனிமவளம் சர்வதேசப் புகழ் பெற்றது,இந்திய அளவில் கனிம வளம் மிக்க ஜார்க்கண்ட் மாநிலத்துக்கு அடுத்தபடியாக, தென்னிந்திய அளவில் 134 வகையான கனிமங்கள் நிறைந்த பகுதியாக சேலம் திகழ்கிறது. மேக்னசைட், பாக்சைட் என எங்கும் நிறைந்த மலைகள் சேலத்தின் பெருமையை கம்பீரத்துடன் பறைசாற்றுகின்றன.

விவசாயிகள், வர்த்தகர்கள், ஜவுளித் துறையினர், தொழிலாளர்கள் என நேரம் காலம் பார்க்காமல் உழைக்கக்கூடிய மக்களால் நிரம்பிய சேலம், ஆடித் திருவிழாவை ஒரு மாதத்துக்கு கொண்டாடக்கூடிய நகரமாகவும் உள்ளது.

தமிழகத்தின் வளர்ச்சி, அரசியல், வாழ்வியல், வர்த்தகம் என எந்த துறையை எடுத்துக் கொண்டாலும் சேலத்தை தவிர்த்து எந்த வரலாற்றையும் சொல்லிவிட முடியாது என்பதே சேலம் நகரின் தனிச்சிறப்பாகும். இப்படி சேலத்தின் சிறப்புகள், பழைமை வாய்ந்த அடையாளங்கள், ஆண்டுகள் பல கடந்தாலும் அடையாளம் மாறாத சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்றால் அது மிகையல்ல.

— Mohamedbasidth N, Salem

வங்கக்கடலில் உருவான புயல்! தமிழகத்திற்கு ஆரஞ்சு எச்சரிக்கை!



வங்கக்கடலில் உருவாகியுள்ள முரசு புயல் காரணமாக தமிழகத்தின் வட மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாளை நவம்பர் 2-ஆம் தேதி சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


பலத்த காற்று, இடி, மின்னலுடன் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வானிலை நிலவரங்களை பொதுமக்கள் தொடர்ந்து கவனித்து, அதிகாரப்பூர்வ அறிவுரைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

— Musthafa Hussain, Coimbatore

முக்கிய அரசியல் செய்தி!



தமிழக அரசியலில் புதிய திருப்பமாக, ஓய்வுபெற்ற என்கவுன்டர் ஸ்பெஷலிஸ்ட் வெள்ளத்துரை அதிமுகவில் இணைந்துள்ளார்.

தமிழக காவல்துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற எஸ். வெள்ளத்துரை, சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து கட்சியில் இணைந்தார்.

முன்னதாக சசிகலாவின் அனைத்திந்திய புரட்சித் தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்குநேரி தொகுதியில் போட்டியிட்ட இவர், தற்போது அதிமுகவில் இணைந்துள்ளார்.

— Musthafa Hussain, Coimbatore

தமிழக அரசின் அதிரடி உத்தரவு!



போதைப்பொருள் வழக்குகளை விரைந்து விசாரிக்க தமிழகத்தில் நான்கு புதிய சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளன!

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் வேலூர் ஆகிய நான்கு இடங்களில் இந்த நீதிமன்றங்கள் அமைக்க தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தற்போது 11 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வரும் நிலையில், நிலுவையில் உள்ள போதைப்பொருள் வழக்குகளை விரைந்து விசாரித்து முடிப்பதே இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும்.

போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது!

— Musthafa Hussain, Coimbatore

இடையே இன்று முதல் 2 முறை விமான சேவை: விமான நிலைய இயக்குநர் தகவல்!.




சென்னை- சேலம் இடையே ஞாயிற்றுக்கிழமை முதல் இரண்டு முறை விமான சேவை தொடங்கப்பட உள்ளதாக சேலம் விமான நிலைய இயக்குநர் நவ்ஷாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சேலம் விமான நிலையத்தில் இருந்து நவ.1 முதல் இரண்டு முறை இண்டிகோ விமான சேவை இயக்கப்பட உள்ளது. அதன்படி, சென்னையில் இருந்து புறப்படும் விமானம் மதியம் 12.10 மணிக்கு சேலம் வந்தடைந்து, மீண்டும் 12.30 மணிக்கு சென்னைக்கு புறப்படுகிறது.அதேபோல, மாலையில் சென்னையில் இருந்து 4.50 மணிக்கு சேலம் வந்தடையும் விமானம் 5.10 மணிக்கு மீண்டும் சென்னைக்கு புறப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூடுதல் விமான சேவை மூலம் இரு நகரங்களுக்கும் இடையேயான தொழில், பயணிகள் போக்குவரத்து மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

— Mohamedbasidth N, Salem

ஏற்காடு கரடியூர் வியூ பாயிண்டில் வனத்துறை அமைச்சர் ஆய்வு..




இன்று (31.10.2026) சேலம் மாவட்டம், ஏற்காடு கரடியூர் வியூ பாயிண்டில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ராஜேந்திரகுமார் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அன்பரசன், வனப் பாதுகாவலர் கலாநிதி மற்றும் மாவட்ட வன அலுவலர் அம்புல்கர் யஷ்வந்த் ஜெகதீஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

— Mohamedbasidth N, Salem

சேலம் மாநகராட்சி ஆணையர் ஆய்வு மேற்கொண்டார்.



இன்று (31.10.2026), சேலம் மாநகராட்சி ஆணையர் திரு. லலிதாதித்ய நீலம், ஐ.ஏ.எஸ., ஆஸ்தம்பட்டி மண்டலத்தில் உள்ள அம்மா உணவகத்தை ஆய்வு செய்தார்.

ஆய்வில், உணவின் தரம் மற்றும் அடிப்படை வசதிகள் சார்ந்த விடயங்களை

சேலம் வெள்ளி கொலுசுகளுக்கு தீபாவளி ஆர்டர் குவிந்தது: உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி



வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ. 215 ஆகக் குறைந்துள்ளதால், சேலம் வெள்ளிக் கொலுசு உற்பத்தியாளர்களுக்கு தீபாவளி ஆர்டர்கள் அதிகரித்துள்ளன.

விவசாயத்துக்கு அடுத்தபடியாக வெள்ளிக் கொலுசு உற்பத்தி முக்கியத் தொழிலாக விளங்குகிறது. சேலத்தில் தயாரிக்கப்படும் வெள்ளிக் கொலுசுகள் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுகின்றன.நுணுக்கமான கைவினை வேலைப்பாடுகள், நீடித்த தரம், அழகிய வடிவமைப்பு ஆகியவற்றால் சேலம் வெள்ளிக் கொலுசுகளுக்கு பெண்களிடையே வரவேற்பு உள்ளது. இதேபோல, மெட்டி, குழந்தைகளுக்கான தண்டை, கழுத்துச் செயின், இடுப்புச் செயின் உள்ளிட்ட வெள்ளி ஆபரணங்களுக்கும் விற்பனை வாய்ப்பு உள்ளது.

ஆபரணங்கள் வாங்குவதில் மக்களிடம் ஆர்வம் அதிகரிப்பதால், உற்பத்தியாளர்களுக்கு மொத்த ஆர்டர்கள் கிடைத்து வருகின்றன.

இதுகுறித்து சேலம் வெள்ளிக் கொலுசு உற்பத்தியாளர்கள் நகவினைச் சங்கத் தலைவர் ஆனந்தராஜன் கூறியதாவது:

முன்பே வெள்ளிக் கொலுசுகளுக்கான ஆர்டர்கள் வரத் தொடங்கும். ஆனால், கடந்த 2 மாதங்களாக உற்பத்தியாளர்களுக்கு குறைந்த அளவிலேயே ஆர்டர்கள் கிடைத்தன. இதனால், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆர்டர்கள் 50 சதவீதம் வரை குறையும் என எதிர்பார்த்தோம்.தற்போது தீபாவளி நெருங்கும் நிலையில், வெள்ளி உள்ளிட்ட ஆபரணங்களுக்கான ஆர்டர்கள் வேகமாக அதிகரித்து வருகின்றன. வெள்ளியின் விலை குறைந்திருப்பதே இதற்கு முக்கியக் காரணம்.சில மாதங்களுக்கு முன்பு சில்லறை சந்தையில் ஒரு கிராம் வெள்ளி ரூ. 240-க்கு விற்பனையானது. தற்போது ரூ. 215 ஆகக் குறைந்துள்ளது.

வெள்ளி ஆபரணங்களை வாங்க மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். தொடர்ந்து கிறிஸ்துமஸ், பொங்கல் என அடுத்தடுத்த பண்டிகைகள் வருவதால், வெள்ளிக் கொலுசுகளுக்கான ஆர்டர்கள் மேலும் அதிகரிக்கும் என நம்புகிறோம் என்றார்.

— Mohamedbasidth N, Salem